பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 11 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கூட்டு முயற்சி தேவை என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. உலக நாடுகளில் 3வது மிகப்பெரிய புத்தொழில் நிறுவன சூழல் மிக்க நாடாக இந்தியா திகழ்கிறது எனறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தென்கிழக்கு ஆசிய பகுதியில் இணைய வழிக் குற்றங்களில் தொடர்புடைய 17 ஆயிரம் வாட்ஸ்-அப் கணக்குகளை இந்திய இணையவழி குற்றத்தடுப்பு மையம் முடக்கியுள்ளது.

4. பீஹார் மாநிலம் பட்னாவில் கைதிகள் 3 பேர் உயிரிழந்தது தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது.

5. ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச்சுற்று போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் உறுதியேற்குமாறு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களை வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற ஒரு கோடி விளக்குகளை ஏற்றி வைக்கும் தீப உற்சவ நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

உண்மையின் பாதையைப் பின்பற்றவும், சாதாரண மக்களின் நலனுக்காக பாடுபடவும் உறுதியேற்குமாறு அவர் வலியுறுத்தினார்.

முழுமையான வளர்ச்சியைக் கொண்டு நாடு முன்னேறிச் செல்வதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேவையான கூட்டு முயற்சிகளின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

நாட்டின் வளமான கலாச்சாரத்தை பாதுகாக்கும் அதே தருணத்தில் வளர்ச்சி இலக்குகளை விரைவில் அடைய முடியும் என்று திருமதி திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

நமது நாட்டை இளைஞர்கள் உலக நாடுகளில் 3வது மிகப்பெரிய புத்தொழில் நிறுவன சூழல் மிக்கதாக மாற்றியமைத்துள்ளனர் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கயானாவின் ஜார்ஜ்டவுனில் உள்ள தேசிய கலாச்சார மையத்தில் இந்திய வம்சாவளியினரை சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் கூறினார்.

உலக பொருளாதார நாடுகளில் 5வது இடத்தில் இருக்கும் இந்தியா, விரைவில் 3ஆம் இடத்திற்கு முன்னேறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் டிஜிட்டல் பொதுக்கட்டமைப்பு, ஏழைகளுக்கு அதிகாரமளித்துள்தாக அவர் தெரிவித்தார்.

50 கோடிக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு டிஜிட்டல் மூலம் இணைக்கப்பட்டதால் மக்களுக்கான நிதியுதவி அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பரிமாற்றம் செய்யப்படுகிறது என்று கூறினார்.

கலாச்சாரம், உணவு, கிரிக்கெட் ஆகியவை இந்தியா – கயானா இடையேயான நட்புறவு அதிகரிக்க காரணம் என்று தெரிவித்தார்.

முன்னதாக கயானா நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் நேற்று மாலை திரு. மோடி உரையாற்றினார்.

ஜனநாயக நடைமுறை மூலமே அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்க முடியும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

ஜனநாயக முறை தங்கள் நடத்தையின் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

உலகளாவிய வளர்ச்சி மற்றும் அமைதிக்கு ஆதரவாக இந்தியா உறுதுணையுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய உலகளாவிய சூழல், மோதலுக்கான தருணம் அல்ல என்று குறிப்பிட்ட அவர், அதற்கான காரணத்தை கண்டறிந்து களைய வேண்டும் என்று கூறினார்.

தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல், இணைதள குற்றம் உள்ளிட்ட பல்வேறு சவால்களை உலக நாடுகள் எதிர்கொண்டுள்ள நிலையில், எதிர்கால தலைமுறையின் நலன் கருதி இப்பிரச்சினைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக நாடுகளின் சிறந்த முன்னேற்றம் மற்றும் செழுமைக்காக மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இந்தியா – கயானா இடையே கல்வி மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு துறைகளில், கருத்துகளை பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும், இதன்மூலம் இளைஞர்கள் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

கயானா நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியாவிற்கு வருகை தருமாறு பிரதமர் திரு. மோடி அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

வக்ஃப் திருத்த மசோதா குறித்த வரைவு அறிக்கை, தயாராக உள்ளதாக அதற்கான நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் திரு. ஜக்தாம்பிகா பால் கூறியுள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக விவாதிப்பதற்கான தேதியை கூட்டுக்குழு விரைவில் அறிவிக்கும் என்று தெரிவித்தார்.

வக்ஃப் சட்டத்தில் அரசு பரிந்துரைத்துள்ள திருத்தங்கள் குறித்து விரிவான அறிக்கையை சிறுபான்மையினர் நல அமைச்சகம் தாக்கல் செய்துள்ளதாக அவர் கூறினார்.

இம்மசோதா குறித்து விரிவாக விவாதிக்க இதுவரை 5 அமர்வுகள் நடைபெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வக்ஃப் மசோதா குறித்த கேள்விகளை எழுப்புவதற்கு குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டதாகவும் திரு. ஜக்தாம்பிகா பால் தெரிவித்தார்.

<<<<>>>>

பீஹார் மாநிலம் பட்னாவில் 13 கைதிகள் நோய்வாய்ப்பட்டு 3 பேர் உயிரிழந்தது தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் மனநலம் பாதிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற மகளிருக்கான தங்குமிடத்தில் அவர்கள் கெட்டுப்போன உணவை உட்கொண்டதால் உயிரிழந்தனர் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தியை அடுத்து, இந்த விசாரணையை மேற்கொள்ள உள்ளது.

இது தொடர்பாக பீஹார் தலைமைச் செயலாளருக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இரண்டு வார காலத்திற்குள் இதற்கு விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறும் அதில் கூறப்பட்டுள்ளது.

உணவு உட்கொண்ட பின் அவர்களுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டதாகவும், அதைத்தொடர்ந்து அவர்கள் பட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் தங்கியிருந்த இடம் பீஹார் அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையால் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

<<<<>>>>

தென்கிழக்கு ஆசிய பகுதியில் இணைய வழிக் குற்றங்களில் தொடர்புடைய 17 ஆயிரம் வாட்ஸ்-அப் கணக்குகளை இந்திய இணையவழி குற்றத்தடுப்பு ஒருங்கிணைப்பு மையம் முடக்கியுள்ளது.

இதுகுறித்து உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் டிஜிட்டல் பாதுகாப்பை வலுப்படுத்தவும், கடல்வழிக் குற்றங்களைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக மின்சார வாரியத்திற்கும், அதானி குழுமத்திற்கும் இடையே எவ்வித ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக சமூக ஊடகங்கள் மற்றும் சில செய்தி நிறுவனங்கள் தவறான கருத்துகளை பதிவிட்டுள்ளதாக கூறினார்.

இதுதொடர்பாக எந்தவிதமான கருத்துகளையும் தம்மிடமோ அல்லது மின்சாரத்துறை அதிகாரிகளிடமோ கேட்டு அறிந்துகொண்ட பின்னரே பதிவிட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் நிறுவனமான சோலார் எனர்ஜி கார்பரேஷன் நிறுவனத்துடன் ஆயித்து 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக ஒரு யூனிட் மின்சாரம், 7 ரூபாய் ஒரு பைசாவுக்கு கொள்முதல் செய்யப்பட்ட நிலையில் தற்போது 2 ரூபாய் 61 காசுகளுக்கு கொள்முதல் செய்யப்படுவதாகவும் திரு. செந்தில் பாலாஜி குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் வாகனங்களை இயக்கும் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாது என்று பெட்ரோல் நிலையங்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சிறியவர்களின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே மாணவர்கள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை ஓட்டி பள்ளிக்கு வரக்கூடாது என்று ஜம்மு-கஷ்மீர் பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

நேபாளத்திற்கு இயக்கப்படும் சர்வதேச விமானங்களுக்கான கட்டண உயர்வை குறைக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட விமான சேவை நிறுவனங்களுக்கு அந்நாட்டு அரசு வலியுறுத்தியுள்ளது.

பழைய நிறுவனங்கள் கட்டணத்தை குறைக்காவிட்டால் புதிய விமான சேவை நிறுவனங்கள் விமானங்களை இயக்க அனுமதிக்கப்படும் என்று நேபாள விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. பத்ரி பாண்டே கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வரும் 25ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று ஆய்வு செய்தார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கனமழை எச்சரிக்கையை அடுத்து தேசிய பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்களும், மாநில பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்களும் தயார் நிலையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆசிய கோப்பை கூடைப்பந்து முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

சென்னையில் உள்ள நேரு உள் விளையாட்டு அரங்கில் இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

பெர்த்தில் நடைபெற உள்ள இப்போட்டி காலை மணி 7.50க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ரித்விக் இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் ஃபிலிப்போ ரொமோனோ - ஸ்டெஃபானோ ட்ராவாக்லியா இணையை வென்றது.

<<<<>>>>

தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே வடநெம்மேலியில் சர்வதேச பீச் வாலிபால் போட்டியை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

வரும் 24ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் 42 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.

இதில் ஆடவர் பிரிவில் 24 அணிகளும், மகளிர் பிரிவில் 24 அணிகளும் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் தெலுகு அணி – பெங்கால் அணியையும், ஹரியானா – பெங்களூரு அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் தமிழக அணி உத்தரப்பிரதேசத்தையும், ஜெய்ப்பூர் அணி தில்லியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**